# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்
# வியாபார முகாமைத்துவ இளமாணிப்பட்டம்
## வெளிவாரிப்பட்டப்படிப்பு - 2026

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படவுள்ள **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்ட** மேற்படி கற்கை நெறியின் 2024/25 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

(அ) க.பொ.த (உ/த) வர்த்தகத்துறையில் சித்திபெற்றிருப்பதுடன் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக முறைமையில் அனுமதி பெறுவதற்கான தகைமையைப் பெற்றிருத்தல்

**அல்லது**

(ஆ) க.பொ.த (உ/த) வர்த்தகத்துறை தவிர்ந்த ஏதேனும் துறையில் சித்தி பெற்றிருப்பதுடன் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக முறைமையில் அனுமதி பெறுவதற்கான தகைமையைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

(இ) இதனுடன் தொடர்புபட்ட ஒரு தொழில்சார் தகைமையைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

(ஈ) கிழக்குப் பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்படக் கூடிய ஏதேனும் கல்விசார்/ தொழில்சார்/ தொழிற் பயிற்சிசார் தகைமையினைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

*(i)* க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 2024ம் வருடம் அல்லது அதற்கு முந்திய வருடங்களில் தோற்றிய மாணவர்கள்.

*(ii)* இலங்கை பல்கலைக்கழக முறைமையில் அனுமதி பெறுவதற்கான தகைமைகள் பெற்றிருத்தல்.

1. அனுமதிக்கப்பட்ட 03 பாடங்களிலும் கூடியது 03 அமர்வுகளுக்கு மேற்படாமல் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் குறைந்தது “S” தரச் சித்தியைப் பெற்றிருத்தல்.
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (*Common General Test*) குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல்.

**தெரிவு நடைமுறைகள்:**

அனுமதிக்கான தகைமைகளில் முதல் பிரிவிலுள்ளவர்களுக்கு (பிரிவு (அ)) முன்னுரிமை வழங்கப்படுவதுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் Z-புள்ளி மற்றும் மொத்தப் புள்ளி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

**பாடநெறிக்கான காலம்** : 03 வருடங்கள்
**மொழி மூலம்** : தமிழ்
**பாடநெறிக் கட்டணம்** : 120,000 LKR

மூன்று தவணைகளில் செலுத்த முடியும். (1ம் வருடம் - 60,000 LKR, 2ம் வருடம் - 40,000 LKR, 3ம் வருடம் - 20,000 LKR) மற்றும் பணம் மீள செலுத்தப்படமாட்டாது.

**விண்ணப்ப நடைமுறைகள்:**

**http://www.cedec.esn.ac.lk/bbm** எனும் இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்ப நடைமுறைகளையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பதாரிகள் இணையத்தளத்தினூடாக சரியான தகவல்களை விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.**

**முடிவுத்திகதி : 15.05.2026**

**மேலதிக விபரங்கள் :**

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, இல.50, புதிய வீதி, மட்டக்களப்பு.
தொ.இல: 065-2227025, மின்னஞ்சல்: cedecinfo@esn.ac.lk
இணையம்: **http://www.cedec.esn.ac.lk**

**பதிவாளர்**

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வந்தாறுமூலை, செங்கலடி.**
12.04.2026